**கவனிக்க**.- 02.01.2026 ஆந் திகதிய 2470 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2471 - 2026 ජනවාරි මස 09 වැනි සිකුරාදා - 2026.01.09

2471 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 24 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 34 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, சனவரி மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, சனவரி மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோரால**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

21 - B 82753- 403 (2026/01)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தர கடற்படையின் குறுகிய கால அதிகாரிகள் மற்றும் தன்னார்வ கடற்படை அதிகாரிகள் நேரடி நுழைவு (ஆண் / பெண்) பதவி வெற்றிடங்கள் – 2026

1. இலங்கை நிரந்தரநேரடி நுழைவு அதிகாரிகளுக்கான (ஆண்/பெண்)பதவிவெற்றிடங்கள்காணப்படுகின்றன.

2. பின்வரும் பிரிவுகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு தகுதிவாய்ந்த ஆண்/பெண் விண்ணப்பதாரிகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

3. நிரந்தர கடற்படை நேரடி நுழைவு மற்றும் குறுகிய கால அதிகாரிகளுக்கான நேரடி நுழைவு (05 வருடகால சேவைக்காக)

அ. நிர்வாக பிரிவு
ஆ. கடல்சார் பொறியியல்
இ. வாகன பொறியியல்
ஈ. விநியோக பிரிவு
உ. மின் மற்றும் மின்னியல் பொறியியல்
ஊ. சிவில் பொறியியல்
எ. பல் மருத்துவம்
ஏ. தகவல் தொழில்நுட்பம்
ஐ. காலாட்படை பிரிவு
ஒ. நிர்வாக அதிகாரி சுகாதாரம்
ஓ. இசைக்குழு பிரிவு

**தன்னார்வ கடற்படை நேரடி நுழைவு**

அ. நிர்வாக அதிகாரி (பொது கடமைகள்)
ஆ. நிர்வாக அதிகாரி (ஆங்கில ஆலோசகர்)
இ. நிர்வாக அதிகாரி (கணக்கு அதிகாரி)
ஈ. உளவியல் ஆலோசகர்

3. **அடிப்படைக் கல்வித் தகைமைகள்:**

அ. இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சா. / த.) பரீட்சையில் தாய்மொழி, ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் (C) கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ. இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த (சா. /த.) பரீட்சையில் தாய்மொழி பாடத்தில் திறமைச் சித்தியுடன் (C) கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் ஆங்கில மொழியில் டிப்ளமோ பெற்றிறுத்தல் வேண்டும்.

4. **உயர்கல்வி மற்றும் தொழிற்தகைமைகள்:**

அ. **நிறைவேற்றுப் பிரிவு (நிரந்தர கடற்படை பிரிவு):**

பதவிநிலை - துணை லெப்டினன்ட் (ஆண்)

*கல்வித் தகைமைகள்* - பௌதிகவியல் விஞ்ஞானம் அல்லது உயிரியல், பொறியியல் தொழினுட்பப் பாடத்தின் கீழ் (க.பொ.த) (உ./த.) தேர்வில் தேர்ச்சி பெற்றிறுத்தல் வேண்டும்.

அல்லது

குறிப்பிட்ட பாடப்பிரிவை சேர்ந்த (க.பொ.த) (உ./த.) தேர்வில் பௌதிகவியல் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் (ICT) தேர்வில் தேர்ச்சி பெற்றிறுத்தல் வேண்டும்;.

அல்லது

இலங்கையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானத்தில் அல்லது பொறியியல் தொழினுட்பத்தில் பொது பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது - 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ஆ. **கடல்சார் பொறியாளர் (நிரந்தர கடற்படை பிரிவு) :**

பதவிநிலை - லெப்டினன்ட் (ஆண்/பெண்)

*கல்வித் தகைமைகள்* - இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் கடல்சார்; பொறியியல் அல்லது இயந்திரப் பொறியியலில் BSC நான்கு வருட முழுநேரப் பட்டம்.

இலங்கை பொறியாளர்கள் நிறுவனம் (IESL) முழு அங்கத்துவ உறுப்பினராக இருத்தல்.

பொறியியல் துறையில் குறைந்தபட்சம் 01 வருட பணி அனுபவம் மேலதிக தகுதியாக கருதப்படும்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

இ. **விநியோக பிரிவு (நிரந்தர கடற்படை பிரிவு):**

பதவிநிலை - துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

*கல்வித் தகைமைகள்* - ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் க.பொ.த (ச./த.)
பரீட்சையில் (ஒரே அமர்வில்) திறமை சித்தி (C) பெற்றிருப்பதுடன் க.பொ.த. (உ./த.) தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

இலங்கை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழ கத்தில் வர்த்தக முகாமைத்துவம், வர்த்தகம், கணக்கியல், வர்த்தக பொருளாதாரம், சொத்து நிர்வாகம் மற்றும் மதீப்பீடு ஆகியவற்றில் விசேட பட்டம் பெற்றிருத்தல்.

வயது - 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ஈ. **மின் மற்றும் மின்னியல் பொறியியல் துறை (நிரந்தர கடற்படை பிரிவு):**

பதவிநிலை - துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

*கல்வித் தகைமைகள்* - இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மின்சாரம், இலத்திரனியல் அல்லது தொலைத்தொடர்பு ஆகியவற்றில் நான்கு வருடகால பொறியியலில் பட்டப்படிப்பு / B-Tech பட்டப்படிப்பு பெற்றிருத்தல் வேண்டும்;.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

உ. **சிவில் பொறியியல் (நிரந்தர கடற்படை பிரிவு)**

பதவிநிலை - லெப்டினன்ட் (ஆண்/பெண்)

*கல்வித் தகைமைகள்* - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக் கழகத்தில் நான்கு வருடகால சிவில் பொறியியல் BSC முழு நேரப்பட்டப்படிப்பு.

இலங்கை பொறியாளர்கள் கவுன்சில் (ECSL) Associate Member முழு அங்கத்துவம் அல்லது உறுப்பினராக இருத்தல்.

பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து குறைந்தபட்சம் 01 வருட பணி அனுபவம் மேலதிக தகுதியாகும்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ஊ. **பல் மருத்துவ பிரிவு (நிரந்தர கடற்படை பிரிவு):**

பதவிநிலை - வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

*கல்வித் தகைமைகள்* - பல் மருத்துவ பீடத்தின் 05 ஆவது மற்றும் 06 ஆவது (Semester) முடித்திருக்க வேண்டும். அல்லது 02 ஆவது பல் அறுவை சிகிச்சை இளங்கலை (BDS) தேர்வில் தேர்ச்சி பெற்று தற்போது பல் அறுவை சிகிச்சை பட்டபடிப்பின் 04 ஆவது ஆண்டில் படித்து கொண்டிருக்க வேண்டும்.

வயது - 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

பதவிநிலை - துணை லெப்டினன்ட்

*கல்வித் தகைமைகள்* - பல் மருத்துவ பீடத்தின் 07 ஆவது மற்றும் 08 ஆவது (Semester) முடித்திருக்க வேண்டும். அல்லது இறுதி பல் அறுவை சிகிச்சை இளங்கலை (BDS) தேர்வில் முதல் பகுதியில் தேர்ச்சி பெற்று தற்போது பல் அறுவை சிகிச்சை பட்டப்படிப்பில் இறுதி ஆண்டில் படித்துக் கொண்டிருக்க வேண்டும்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

பதவிநிலை - லெப்டினன்ட் (மருத்துவம்)

பாலினம் - ஆண்/பெண்

*கல்வித் தகைமைகள்* - பல் அறுவை சிகிச்சை இளங்கலை (BDS) பட்டம் அல்லது அதற்கு சமனான தகுதியுடன் இலங்கை மருத்துவ கவுன்சிலில் (SLMC) வழக்கமான பதிவினைப் பெற்றிறுக்க வேண்டும்.

வயது - 35 வயதுக்கு குறைவாக இருத்தல்.

எ. **தகவல் தொழில்நுட்பப் பிரிவு (நிரந்தர கடற்படை பிரிவு) :**

(1) **பதவிநிலை - வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)**

*கல்வித் தகைமைகள்* - க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகியவற்றில் திறமை சித்தி (C) உடன் க.பொ.த (உ./த.) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் (UGC) அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட Red hat தகுதி பெற்றவராக, Sun solaris சான்றிதழ் பெற்றவராக அல்லது சான்றழிக்கப்பட்ட Ethical Hacker ஆக இருத்தல் வேண்டும்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(2) **பதவிநிலை - துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)**

*கல்வித் தகைமைகள்* - க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகியவற்றில் திறமை சித்தி (C) உடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் (UGC) அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் 03 வருட கால கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து தகவல் தொழில்நுட்பத் துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடகால அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(3) **பதவிநிலை - லெப்டினன்ட் (ஆண்/பெண்) தகைமைகள்**

*கல்வித் தகைமைகள்* - க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகியவற்றில் திறமை சித்தி (C) உடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் (UGC) அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பு இளங்கலை (Special) பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து தகவல் தொழில்நுட்பத் துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடகால அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

ஏ. **காலாட்படை பிரிவு (நிரந்தர கடற்படைப் பிரிவு)**

**பதவிநிலை - வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்)**

*கல்வித் தகைமைகள்* - இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகத் திலிருந்து கலை, வணிகம் முகாமைத்துவம், உயிரியல் மற்றும் பொறியியல் ஆகியவற்றில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயது - 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

**பதவிநிலை - துணை லெப்டினன்ட் (ஆண்)**

*கல்வித் தகைமைகள்* - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட அரச பல்கலைக்கழ கத்திலிருந்து கலை, வணிகம் முகாமைத்துவம், உயிரியல் மற்றும் பொறியியல் ஆகியவற்றில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயது - 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

**நிர்வாக அதிகாரி சுகாதாரம் (நிரந்தர கடற்படை பிரிவு):**

(1) **பதவிநிலை - வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)**

*கல்வித் தகைமைகள்* - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் நர்சிங் அல்லது மருத்துவத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

எதிர்பார்ப்பு - மருத்துவமனை துறையில் குறைந்தபட்சம் 02 ஆண்டுகள் மேற்பார்வை அனுபவம் பெற்றிருத்தல்.

பதிவுசெய்திருத்தல் - சம்மந்தப்பட்ட தொழில் துறைக்கு இலங்கை தாதியர் சபை அல்லது இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல் கட்டாயமாகும்.

வயது - 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ஐ. **இசைக்குழுப் பிரிவு - இசை :**

(1) **பதவிநிலை - வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)**

*கல்வித் தகைமைகள்* - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இசையில் கலைநிகழ்ச்சியில் சிறப்புப் பட்டம் மற்றும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இசையில் நுண்கலை சிறப்புப் பட்டம் மற்றும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இசையில் இளங்கலை பட்டப்படிப்பு முதல் தர சித்தி பெற்றிருக்க வேண்டும்.

கூடுதல் தகுதிகள் - மேற்கத்திய இந்திய பாடத்தில் எடுக்கப்பட்ட நடைமுறை படிப்புகள் தொடர்புடைய துறையில் பெற்ற சாதனைகள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்பு மற்றும் சாதனைகள்.

கடற்படை இசைக்குழுவினால் நடத்தப்படும் நடைமுறைப் பரீட்சையை வெற்றிகரமாக முடித்த பின்னர் தகுதியான விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். அனைத்து விண்ணப்பதாரர்களும் தகுதிக்கான நடைமுறைத் தேர்வில் கலந்துகொள்வது கட்டாயமாகும்.

வயது - 28 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(2) **பதவிநிலை - துணை லெப்டினன்ட் (ஆண்/ பெண்)**

*கல்வித் தகைமைகள்* - பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இசையில் கலைநிகழ்ச்சியில் சிறப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இசையில் நுண்கலை சிறப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இசையில் இளங்கலை பட்டப்படிப்பு பெற்றிருக்க வேண்டும்.

கூடுதல் தகுதிகள் - மேற்கத்திய இந்திய பாடத்தில் எடுக்கப்பட்டட மற்ற மற்றும்

நடைமுறை படிப்புகள், சோதனைகள் துறையில் தொடர்புடைய சாதனைகள்.

தேசிய மற்றும் சர்வதேச அளவிலான இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்பு மற்றும் சாதனைகள்.

கடற்படை இசைக்குழுவினால் நடத்தப்படும் நடைமுறைப் பரீட்சையை வெற்றிகரமாக முடித்த பின்னர் தகுதியான விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். அனைத்து விண்ணப்பதாரர்களும் தகுதிக்கான நடைமுறைத் தேர்வில் கலந்துகொள்வது கட்டாயமாகும்.

வயது - 28 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ஒ. **நிறைவேற்றுப் பிரிவு – (தன்னார்வ கடற்படை பிரிவு) பொதுக் கடமை**

பதவிநிலை - வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

*கல்வித் தகைமைகள்* - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொது பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயது - 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ஓ. **நிறைவேற்றுப் பிரிவு - ஆங்கில மொழி ஆலோசனை பிரிவு – (தன்னார்வ கடற்படை பிரிவு)**

**பதவிநிலை - துணை லெப்டினன்ட் (ஆண்/ பெண்)**

*கல்வித் தகைமைகள்* - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தை வெளிநாட்டு மொழியாக கற்பித்தல் (TESOL) தொடர்பான பட்டம் அல்லது ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் ஆங்கிலம் கற்பிப்பதில் டிப்ளமோ மற்றும் அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் 01 வருட காலம் ஆங்கிலம் கற்பிப்பதில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது - 35 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ஔ. **நிறைவேற்றுப் பிரிவு - கணக்கு அதிகாரி - (தன்னார்வ கடற்படைப் பிரிவு)**

**பதவிநிலை - வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்)**

*கல்வித் தகைமைகள்* - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணக் கியலில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயது - 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ட. **(தன்னார்வ கடற்படை பிரிவு) உளவியல் ஆலோசகர் பிரிவு**

**பதவிநிலை - வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்)**

*கல்வித் தகைமைகள்* - உளவியல் ஆலோசனை யில் இளங்கலை பட்டப்படிப்பு பெற்றிருக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது மருத்துவ மனையில் உளவியல் ஆலோசனையில் 02 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும். (பதிவு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.)

வயது - 34 வயதுக்கு குறைவாக இருத்தல்.

5. **ஏனைய தகைமைகள் :**

விண்ணப்பதாரிகள் (ஆண்/பெண்) இலங்கை நிரந்தர/ தன்னார்வ கடற்படைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பின்வரும் பொது நிபந்தனைகள் கட்டாயம் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அ. தேசிய இனம் - இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ. வயது - விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசி திகதியில் அந்தந்தப் பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வயது இருத்தல் வேண்டும்.

இ. உயரம் - ஆண் - 5'6" (167.64 செ.மீ.) குறை யாதிருத்தல் வேண்டும்.

பெண் -5' 3" (160.02 செ.மீ.) குறையாதிருத்தல் வேண்டும்.

ஈ. நிறை உடல் திணிவுச் சுட்டி - ஆண்- 17-27 குறையாதிருத்தல் வேண்டும்.

பெண் - 17- 27 குறையாதிருத்தல் வேண்டும்.

உ. மார்பு - ஆண் - 32" (81.28 செ.மீ.) குறையா திருத்தல் வேண்டும்.

ஊ. பார்வை நிறம் - எஸ்ரிடீ II (உரிய பார்வை)

எ. பார்வைத் திறன் - இடக் கண்ணில் 6/6 மற்றும் வலக் கண்ணில் 6/6 (மூக்குக்கண்ணாடி மற்றும் தொடர்பு வில்லைகள் இன்றி) (மருத்துவம், இசைக்குழு மற்றும் விநியோக துறைக்காக 6/12 கண்வில்லைகள் மூலம் 6/6 சரி செய்யப்பட்ட நபர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்)

ஏ. சிவில் அந்தஸ்து - திருமணமானவர்/திருமண மாகாதவர்

6. விளையாட்டுத் துறையில் காட்டிய சிறந்த சாதனைகள் மீது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்பதுடன், ஏற்கனவே அரசாங்க / தனியார் துறையில் தொழிலில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் மீது விசேட முன்னுரிமை வழங்கப்படும்.

7. மேலே 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளில் காட்டப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **சேவை நிபந்தனைகள் :**

அ. விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர/ தன்னார்வ கடற்படை ஆண்/பெண் உத்தியோ கத்தர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்

என்பதுடன், அவர்கள் அடிப்படை பயிற்சி நெறிகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

ஆ. இலங்கை கடற்படைத் தளபதியின் தீர்மானத்திற்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற ஆண்/பெண் உத்தியோகத்தர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் அல்லது வெளிநாட்டில் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

இ. அனைத்து உத்தியோகத்தர்களும் (ஆண்/பெண்) கடமை நிமித்தம் அல்லது பயிற்சிக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உலகின் எந்தவொரு நாட்டுக்கும் இணைக்கப்படுவதற்குக் கட்டுப் படுதல் வேண்டும்.

ஈ. பயிற்சிக் காலத்தின்போதும், அதன் பின்னரும் எல்லா ஆண்/பெண் உத்தியோகத்தர்களும் இலங்கை கடற்படைச் சட்டம், கடற்படை உத்தரவுகள் மற்றும் குறிப்புகள் மூலம் அமுல்படுத்தப்படும் விதிகள், ஒழுங்குமுறைகள், இங்கு விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு கட்டுப் படுதல் வேண்டும்.

உ. பயிற்சிக் காலப்பகுதியில் எவரேனும் உத்தியோகத்தர் (ஆண்/பெண்) ஒருவருக்கு தமது அபேட்சகத்துவத்தை சுயவிருப்பின் பேரில் இடைநிறுத்திக்கொள்வதற்குத் தேவைப்படின், அவ் உத்தியோகத்தர் சார்பில் இலங்கை அரசாங்கத்தினால் அதுவரை ஏற்க நேரிட்ட அனைத்துச் செலவுகளையும் அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

ஊ. பயிற்சிக் காலப்பகுதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் ஆண்/பெண் உத்தியோகத்தரொருவரின் தவறான நடத்தை காரணமாக அல்லது அவர் பொறுப்புக்கூற வேண்டிய ஏதேனும் காரணி காரணமாக அதிகார ஆணை வழங்கப்படுவதற்கு அவர் தகைமையற்றவர் என அதிகாரிகளினால் தீர்மானிக்கப்பட்டால், அவ் உத்தியோகத்தர் சார்பில் அதுவரை ஏற்க நேரிட்ட அனைத்துச் செலவுகளையும் அச்சந்தர்ப்பத்திலேயே இலங்கை அரசுக்குத் திருப்பிச் செலுத்துவதற்கு இணங்குவதாக, இலங்கை அரசின் பிரதிநிதி என்ற வகையில் இலங்கை கடற்படைத் தளபதியுடன் உடன்படிக்கையொன்றிற்கும், பிணை முறியொன்றிற்கும் கைச்சாத்திடுதல் வேண்டும்.

எ. பயிற்சிக் காலப்பகுதியில் ஆண்/பெண் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை கடற்படை இல்லங்களிலிருந்து தங்குமிட வசதிகளும், உணவும் வழங்கப்படும்.

ஏ. வெற்றிடமாகவுள்ள திருமணமானவர்களுக்கான இல்லங்களை அடிப்படையாகக் கொண்டு திருமணமான ஆண்/பெண் உத்தியோகத்தர் களுக்கு இல்லங்கள் வழங்கப்படும். இதற்கான இல்ல வாடகை அரசாங்க ஊழியர்களுக்கு ஏற்புடையவாறு அறவிடப்படும்.

9. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள் :**

தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் பிரகாரம் மொழிக் கொள்கையை அமுல் செய்யும் பொருட்டு ஆக்கப்பட்டுள்ள மற்றும் இதனகத்துப் பின்னர் ஆக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகள் மற்றும் உறுப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

10. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் :**

05/2025 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**பல் மருத்துவ துறைக்கான ஊதியம்**

| *விபரம்* | *பதவி* | *வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ரூ.)* | *துணை லெப்டினன்ட் (ரூ.)* | *லெப்டினன்ட் (ரூ.)* |
|---|---|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | பல் மருத்துவம் | 73,344.00 | 73,344.00 | 73,344.00 |
| வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு | - | 17,800.00 | 17,800.00 | 17,800.00 |
| சீருடைக் கொடுப்பனவு | - | 525.00 | 525.00 | 525.00 |
| சிரம கொடுப்பனவு | - | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |

| *விபரம்* | *பதவி* | *வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ரூ.)* | *துணை லெப்டினன்ட் (ரூ.)* | *லெப்டினன்ட் (ரூ.)* |
|---|---|---|---|---|
| இடைக்கால கொடுப்பனவு | - | 3,000.00 | 3,000.00 | 3,000.00 |
| சீர்குலைந்த வருகை மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு | பல் மருத்துவம் பதவி II | 70,000.00 | 70,000.00 | 70,000.00 |
| ஓய்வூதியத்துடன் கூடிய கொடுப்பனவு | பல் மருத்துவம் பதவி II | 1,700.00 | 1,700.00 | 1,700.00 |
| ஓய்வூதியம் இல்லாமல் கொடுப்பனவு | பல் மருத்துவம் பதவி II | 1,700.00 | 1,700.00 | 1,700.00 |
| சிறப்பு கூடுதல் கொடுப்பனவு (பல் மருத்துவ அதிகாரி) | பல் மருத்துவம் பதவி II | 1,500.00 | 1,500.00 | 1,500.00 |
| மொழிக் கொடுப்பனவு | பல் மருத்துவம் பதவி II | 1,804.00 | 1,804.00 | 1,804.00 |
| தொடர்பு கொடுப்பனவு | பல் மருத்துவம் பதவி II | 3,000.00 | 3,000.00 | 3,000.00 |
| விசேட கொடுப்பனவு (சூழ்நிலையை பொறுத்து) | பல் மருத்துவம் பதவி II | 34,846.80 | 34,846.80 | 34,846.80 |
| **மொத்தம்** | | **210,219.80** | **210,219.80** | **210,219.80** |

**மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் தவிர அனைத்து துறைகளுக்குமான ஊதியம்**

| *விபரம்* | *வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ரூ.)* | *துணை லெப்டினன்ட் (ரூ.)* | *லெப்டினன்ட் (ரூ.)* |
|---|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 59,633.00 | 66,726.00 | 76,653.00 |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 17,800.00 | 17,800.00 | 17,800.00 |
| சீருடைக் கொடுப்பனவு | 525.00 | 525.00 | 525.00 |
| சிறப்பு கூடுதல் சலுகை | 3,000.00 | 3,000.00 | 3,000.00 |
| வேறு கொடுப்பனவு | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| விடுமுறையின் போதான கொடுப்பனவு (சந்தர்ப்பத்தை பொறுத்து) | 34,846.00 | 34,846.00 | 34,846.00 |
| **மொத்தம்** | **116,804.80** | **123,897.80** | **133,824.80** |

11. **பயிற்சியின் போதும் அதற்கு பின்னரும் உள்ள வசதிகள், கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் :**

அ. வெளியிலிருந்து உணவினை பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் உணவுக் கொடுப்பனவு வழங்கப்படும்.

ஆ. ஏற்புடையவிடத்து தகைமைக் கட்டணமாக மாதமொன்றுக்கு அதிகபட்சம் ரூ. 637.50 வரை வழங்கப்படும்.

இ. இலவசமாக ரயிலில் பயணிப்பதற்கான விடுமுறை இரயில்வே அனுமதிகளின் மூன்று தொகுப்புக்கள் (உத்தியோகத்தர் (ஆண்/பெண்) வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் அவரை சார்ந்திருப்பவர்களுக்கு பொருந்தும்) உண்டு.

ஈ. முகாமில் தங்கியிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு (ஆண்/பெண்) மாதத்தில் ஒரு தடவை வீட்டிற்கு செல்வதற்கும், சென்று வருவதற்கும் ஒரு சோடி கடமை நிமித்தமான புகையிரத ஆணைச் சீட்டுகள் வழங்கப்படும் அல்லது பேரூந்துக் கட்டணம் செலுத்தப்படும்.

உ. சீருடை மற்றும் அதனுடன் இணைந்த துணைப் பொருட்கள் இலவசமாக வழங்கப்படும்.

ஊ. இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும். (உத்தியோகத்தர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் அவரை சார்ந்திருப்ப வர்களுக்கு பொருந்தும்).

எ. திருமணமானவர்கள் அரசாங்க இல்லமொன்றில் தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொள்ளாத திருமணமான ஆண்/பெண் உத்தியோகத்தர்கள் ரூ. 3,200.00 தொடக்கம் ரூ. 8,500.00 வரையான வீட்டு வாடகைப் படிக்கு உரித் துடையவர்களாவர்.

12. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்.**

அ. விண்ணப்பங்கள் கீழ்க் காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை, 2026 தை மாதம் 30 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு “சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), இலங்கை கடற்படை தலைமையகம், பாதுகாப்பு தலைமையக வளாகம் த.பெ. எண் 593, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், “நேரடி நுழைவு 2025/01 – நிரந்தர’’ தன்னார்வ ஆண்/பெண் உத்தியோகத்தர்கள்” எனக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் நிகழ்நிலை மூலமாக விண்ணப்பிக்க www. navy.lk/Joinus எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும் அல்லது 011-7195120/011-7195154/0760275685 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

ஆ. நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அறிவிக்கப் படமாடாது. ஏந்தவொரு விண்ணப்பம் தொலைந்துவிட்டதாகவோ அல்லது பதிவு தபாலில் தாமதமாகிவிட்டதாக எந்தவொரு புகாரும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான எந்த வொரு அறிவிப்பும் செய்யப்படமாட்டாது.

இ. அரசாங்க சேவையிலுள்ள (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், சிவில் நிறுவனங்கள்) விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள், விண்ணப்பதாரி தெரிவு செய்யப்பட்டால் விடுவிக்கப்படுவார் எனும் அத்தாட்சிப் படுத்தல் கடிதம் நிறுவனத்தலைவர் ஊடாக (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், சிவில் நிறுவனங்கள்) சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும்.

ஈ. விண்ணப்பதாரிகள், நேர்முகப் பரீட்சையின் போது அல்லது வேறேதேனும் சந்தர்ப்பத்தில் கீழ்க்காட்டப்பட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பங்களை அனுப்பும் போது அவ் ஆவணங்களின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட நிழற் பிரதிகளை இணைத்து அனுப்புதலும் வேண்டும்.

(1) பிறப்புச் பதிவுச்சான்றிதழ்.

(2) விண்ணப்பித்த பிரிவிற்காக தேவைப்படும் கல்வி/உயர்கல்வி/தொழிற்கல்வி பட்டத்தகைமைகள் மற்றும் முதுகலைப் பட்டம் பற்றிய சான்றிதழ்கள்.

(3) பாடசாலையிலிருந்து பெற்றுக்கொண்ட பாடசாலை விடுகைப்பத்திரம் மற்றும் குணநலச்சான்றிதழ்.

(4) ஆறு மாத காலத்திற்குள் பெற்றுக்கொண்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ்.

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிட மிருந்து பெற்றுக்கொண்டதொழில்/ தொழில்நுட்ப அனுபவச் சான்றிதழ் (ஏதாவது இருப்பின்).

(6) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு குணநலச்சான்றிதழ்கள் (இரண்டு வருடங்களுக்கு மேல் விண்ணப்ப தாரியை நன்கு அறிந்து வைத்திருக்கும் பொறுப்புவாய்ந்த நபரொருவரிட மிருந்து அல்லது தற்போதைய தொழில்தருநரிட மிருந்து).

(7) விளையாட்டுத்துறைசார் செயற்பாடுகள் மற்றும் ஏனைய தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்

உ. கோரப்படும்போது மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்ப தாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஊ. வேறு ஆவணங்களோ அல்லது ஆவணங்களின் மூலப்பிரதிகளோ விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் ஆகாது.

எ. விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை அனுப்பிவைத்து அவை காணால் போகுமாயின், இலங்கை கடற்படை அதற்கு பொறுப்பேற்காது.

13. விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள ஏதேனும் கூற்று பொய்யானதென கண்டறியப்பட்டால், அப் பொய்யான கூற்று தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரி தகைமையிழப்புக்கு ஆளாவார். தெரிவின் பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரி தண்டனையுடன் பதவி நீக்கம் செய்யப்படுவார்.

14. **தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள்:**

அ. மேற்குறிப்பிடப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் (ஆண்/பெண்) அடிப்படை நேர்காணலுக்குத் தோன்றும் போது உயரம், வயது கண்பார்வை மற்றும்

எடை ஆகியவற்றை சரிபார்க்க ஆரம்ப மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள உயரம், வயது, பார்வை மற்றும் எடை ஆகியவற்றை பூர்த்தி செய்யாத விண்ணப்பதார்கள் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். விண்ணப்பதாரரின் உயரம் மற்றும் வயது தேவைகளுக்கு ஏற்ப இல்லாவிட்டாலும் கடற்படை சேவைக்கு பயனுள்ள சிறப்பு திறன் இருந்தால் அவர் சேவை தேவையின் அடிப்படையில் கடற்படைத் தளபதியின் ஒப்புதலுடன் பரிசீலிக்கப்படுவார். அடிப்படை நேர்காணலில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே பின்வரும் உடல் தகுதித் தேர்வுக்கு சமர்ப்பிக்கப்படுவார்கள்.

ஆ. உடற் தகைமை பரிசோதனையில் சித்தியெய்துவதற்கான தேவைப்பாடுகள்

| *நிகழ்வுகள்* | *முறைமை* | | *காலம்* | |
|---|---|---|---|---|
| | *ஆண்* | *பெண்* | *ஆண்* | *பெண்* |
| 1600 மீட்டர் ஓட்டம் (நிமிடங்கள்) | - | - | நிமிடங்கள் 09 | நிமிடங்கள் 11 |
| Push ups | 12 அல்லது அதிகமாகவோ | 08 அல்லது அதிகமாகவோ | நிமிடங்கள் 01 | நிமிடங்கள் 01 |
| Sit ups/ curl ups | 10 அல்லது அதிகமாகவோ | 07 அல்லது அதிகமாகவோ | நிமிடங்கள் 01 | நிமிடங்கள் 01 |

இ. உடற் தகைமை பரிசோதனையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மட்டும் இலங்கை கடற்படை வைத்தியசாலை மூலம் நடாத்தப்படுகின்ற முழுமையான மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். முழுமையான மருத்துவ பரிசோதனையில் சித்தியடைவோர் இரண்டாவது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இரண்டாவது நேர்முகப் பரீட்சையில் சித்தியெய்தும் விண்ணப்பதாரிகள் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் மட்டுமே நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய தெரிவுசெய்யப்படுவர்.

ஈ. ஆட்சேர்ப்புக்குத் தகைமை பெறாத விண்ணப்பதாரிகளுக்கு அது பற்றி அறிவிக்கப் படமாட்டாது.

உ. நேர்முகப்பரீட்சைக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு (ஆண்/பெண்), நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பன பற்றி வட்ஸ்அப் செயலி (WhatsApp) ஊடாக மட்டுமே அறிவிக்கப்படும் என்பதுடன், எழுத்துமூலமான தகவல்கள் எதுவும் தபால் மூலம் அறிவிக்கப்படமாட்டாது. நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவது தொடர்பாக பிரயாணச் செலவுகளோ அல்லது வேறு கொடுப்பனவோ செலுத்தப்படமாட்டாது.

ஊ. நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் இலங்கை கடற்படை மருத்துவ சபையின் முன்பாக தோன்ற வேண்டும்.

எ. விண்ணப்பதாரியொருவர் (ஆண்/பெண்) நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தனது தேசிய ஆளடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏ. விண்ணப்பதாரியொருவரை (ஆண்/பெண்) பரிந்துரை செய்ய விரும்பும் எவரும் அவருக்கு நற்சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். விண்ணப்பதாரி யொருவரைத் தெரிவுசெய்வதில் எந்தவொரு வடிவிலான வலியுறுத்தல் அல்லது செல்வாக்கு செலுத்த முயற்சித்தல் என்பவை அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையிழக்கச் செய்யும்.

ஐ. விண்ணப்பதாரிகளினால் (ஆண்/பெண்) சமர்ப்பிக்கப்படுகின்ற கல்வி மற்றும் தொழிற் தகைமை சான்றிதழ்களின் செல்லுபடித்தன்மை பரீட்சைகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப் புடன் உறுதிசெய்யப்படும்.

ஒ. எல்லா விண்ணப்பதாரிகளினதும் பாதுகாப்பு இசைவு அறிக்கைகள் கடற்படைத் தலைமை யகத்தினால் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப் படும்.

15. இலங்கை கடற்படை கட்டளைத்தளபதி, இலங்கை கடற்படையில் நேரடி நுழைவு அலுவலர்கள் (ஆண்/பெண்) ஆட்சேர்ப்பு செய் கின்ற செயன்முறையின் இறுதித் தீர்மானங்களை மேற்கொள்கின்ற தத்துவத்தை கொண்டிருப்ப துடன், தேசிய பாதுகாப்பு மற்றும் இலங்கை கடற்படையின் நிர்வாகம்சார் தேவைப்பாடுகள் ஆகியவற்றுக்கேற்ப இலங்கை கடற்கடை கட்டளைத்தளபதி மேற்படி தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான இறுதித் தீர்மானம் மேற்கொள்கின்ற தற்றுணிவினைக் கொண்டிருப்பார்.

**குறிப்பு:** இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுகின்றது. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

பீஏகேஎஸ்பீ பானகொட , ஆர்எஸ்பீ, யூஎஸ்பி, என்டீயூ, பிஎஸ்ச
துணை அட்மிரால்,
இலங்கை கடற்படைத் தளபதி.

இலங்கை கடற்படைத் தலைமையகம்,
பாதுகாப்பு தலைமையக வளாகம்
த.பெ. எண் 593,
பத்தரமுல்ல.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**இலங்கை கடற்படை- நிரந்தர மற்றும் தன்னார்வ கடற்படையில் ஆண்/பெண் நேரடி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பப் படிவம்**

தேசிய இனம்: ……………………………………………………………………………………………………………………
(பரம்பரை மூலமா அல்லது பதிவின் மூலமா இலங்கைப் பிரசை என்பதைக் குறிப்பிடவும்.
பதிவின் மூலமாயின் பதிவுச் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்)

விண்ணப்பிக்கும் பிரிவு / பதவி: …………………………………………………………………………………………………

முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு) : ………………………………………………………………………

தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ……………………………………………………………………………………………

நிரந்தர முகவரி: ……………………………………………………………………………………………………………

தபால் முகவரி: ………………………………………………………………………………………………………………

மின்னஞ்சல் முகவரி: …………………………………………………………………………………………………………

பிறந்த திகதி: ………………………………………………………………………………………………………………

வயது: வருடங்கள்…. மாதங்கள்……… நாட்கள்…………(2026.01.30 ஆந் திகதிக்கு )

உயரம்………… (அங்குலம்) மார்பு………… (அங்குலம்) நிறை ….(கிலோகிராம்)

நிரந்தர வதிவிடத்திற்கு உரிய பொலிஸ் நிலையம்: …………………………………………………………………………

மாவட்டம்:……………………………………………………………………………………………………………………

தேர்தல் தொகுதி: ……………………………………………………………………………………………………………

கிராம அலுவலர் பிரிவு: ………………………………………………………………………………………………

தொலைபேசி இலக்கம் (WhatsApp): ………………………………………………………………………………………

சிவில் அந்தஸ்து: ……………………………………………………………………………………………………………

பாலினம் :……………………………………………………………………………………………………………………

கல்விகற்ற பாடசாலைகள் :…………………………………………………………………

பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள்:

| *பாடசாலையின்/ பல்கலைக்கழகத்தின் பெயர்* | *தோற்றிய பரீட்சை* | *பரீட்சைக்குத் தோற்றிய வருடம்* | *சித்தியடைந்த பாடங்கள் (தரம் உள்ளடங்கலாக)* |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>ஏனைய | | |

பாடசாலை அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பின்னர் செய்த தொழில் பற்றிய விபரங்கள் (ஏற்புடையதாயின்):

| *தொழில்தருநரின் பெயர் மற்றும் முகவரி* | *தொழிலின் தன்மை* | *சேவைக்காலம்* | |
|---|---|---|---|
| | | *இருந்து* | *வரை* |
| | | | |

பெற்றோர் பற்றிய விபரங்கள்:

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை<br>தாய் | | | |

பதவிக்கான ஏதேனும் விசேட தகைமைகள் :……………………………………………………………………………

விளையாட்டுகளில் படைத்த சாதனைகள் பற்றிய விபரங்கள் (பங்குபற்றிய போட்டிகள் மற்றும் விளையாட்டுக் குழுக்கள், திகதி மற்றும் படைத்த சாதனைகளுடன் தருக) :……………………………………………………………………………

பாடசாலையில் அல்லது பல்கலைக்கழகத்தில் அல்லது வெளிவாரியான நிறுவனங்களில் காட்டிய பிற சாதனைகள் (திகதி, ஆண்டு முதலியவற்றுடன் விபரங்களைத் தரவும்) :……………………………………………………………………

ஆயுதப்படை, தன்னார்படை, பயிலிளவல் படை அல்லது ஆண் சாரணர் அமைப்பில் ஆற்றிய ஏதேனும் முன்னரான சேவை :……………………………………………………………………………………………………………

இலங்கை கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதப்படைச் சேவைகளில் அல்லது பொலிஸ் படையில் இணைவதற்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்துள்ளீர்களா? அவ்வாறெனின், அவை பற்றிய விபரங்களையும் பெறுபேறுகளையும் குறிப்பிடவும் :……………………………………………………………………………………………………………

சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு அல்லது இடைநிறுத்தப்பட்ட தண்டனைத்தீர்ப் பொன்றைப் பெற்றுள்ளீரா? அவ்வாறெனின், விபரங்களைத் தரவும் :……………………………………………………

அரசாங்க திணைக்களமொன்றில், சபையொன்றில், கூட்டுத்தாபனமொன்றில், பகிரங்கச்சேவை தாபனமொன்றில் (மத்திய வங்கி/அரசாங்க வங்கிகள் /பல்கலைக்கழகங்கள்/ சிவில் அமைப்புக்கள்/அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் கம்பனிகள் அடங்கலாக) நீங்கள் சேவையாற்றியுள்ளீரா? அவ்வாறெனின், தொழில் முடிவுறுத்தப்பட்டமைக்கான காரணங்களையும் விபரங்களையும் குறிப்பிடுக :……………………………………………………………………………………………

நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள்:

| *பெயர்* | *பதவி* | *தபால் முகவரி* |
|---|---|---|
| | | |

விண்ணப்பதாரியினால் கைச்சாத்திடப்பட வேண்டிய வெளிப்படுத்தல்:

மேலே என்னால் கூறப்பட்ட விடயங்கள் உண்மையானவையும், சரியானவையும் என எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில் வெளிப்படுத்துகின்றேன். இலங்கை அரசாங்கத்தின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கடற் படையில் உள்ள அதிகார ஆணைக்குழுவிற்காக தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பாக கடைபிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் பிரயோகிக்கப்படும் ஒழுங்குவிதிகளையும் நான் நன்கு வாசித்து புரிந்துகொண்டேன்.

……………………………  ………………………………
திகதி  விண்ணப்பதாரியின் கையொப்பம்

பூர்த்தி செய்யபட்ட விண்ணப்பப்படிவத்தை ( தகுதிகள் தொடர்பான ஆவணங்களின் சான்றழிக்கபட்ட நகலுடன்) கீழே உள்ள முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

மூத்த பணிப்பாளர் அதிகாரி ( ஆட்சேர்ப்பு)
இலங்கை கடற்படைத் தலைமையகம்,
பாதுகாப்பு தலைமையக வளாகம்
த.பெ. இல. 593,
பத்தரமுல்ல.

தொடர்பு கொள்ள- மின் அஞ்சல் : nhqssorec@gmail.com தொலைபேசி இல. : 0117195154, 0117195120 கையடக்க தொலைபேசி இல. : 0760275685

01-107

---

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### மாகாண விவசாயத் திணைக்களம் – மேல் மாகாணம் தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (NVQ4) – 2026 துறைசார் உதவியாளர் (விவசாயம் ) துறைசார் உதவியாளர் (விவசாய விஸ்தரிப்பு) பயிற்சி பாநெறி ஹோமாகம (ஆண்கள்) மற்றும் வல்பிட (பெண்கள்) மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களில் நடைபெறும்

01. மேலே குறிப்பிடப்பட்ட பாடநெறிக்காக மாணவ மாணவிகளிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் மேல் மாகாண விவசாயப் பணிப்பாளரினால் கோரப்படுகின்றது. இப் பாடநெறியானது சிங்கள மொழி மூலம் நடைபெறும். இந்தப் பாடநெறி ஹோமாகம (ஆண்கள்) மற்றும் வல்பிட (பெண்கள்) மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களில் நடைபெறும்.

விவசாயப் பிரிவில் தொழில் வாய்ப்பு மற்றும் சுய தொழிலை அடிப்படையாகக் கொண்டு செயற்படுபவர்களை இலக்காகக் கொண்டது.

02. **பாடநெறின் தன்மை :**

- பாடநெறி பிரயோக மற்றும் எழுத்து மூலப் பயிற்சி ஒன்றாக நடாத்தப்படும் இந்தப் பாடநெறியை சிறப்பாகப் பூர்த்தி செய்யும் மாணவ மாணவிகளுக்கு மேல் மாகாண விவசாயத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்கப்படும்.
- மேலும் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் தேசிய தொழிற் பயிற்சி தகைமை (NVQ4) சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்படும்.
- பாடநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடங்கள் பின்வருமாறு :

➢ துறைசார்ந்த உதவியாளர் (விவசாயம்) NVQ4 க்கு உரிய பாடநெறிகள் :

i. A-01S003U01 - விவசாயத்தின் அடிப்படைகள்

ii. A-01S003U02 - நெல் மற்றும் பிற பயிர்களை ஸ்தாபித்தில் மற்றும் பராமரித்தல்
iii. A-01S003U03 - மற்றைய துறைரீதியான பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல்
iv. A-01S003U04 - பூங்காப் பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல்
v. A-01S003U05 - அறுவடையும் மற்றும் ஆரம்ப நடைமுறைகளும்
vi. A-01S003U06 - பண்ணை இயந்திரங்கள் உபகரணங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு
vii. A-01S003BU01 - பணியிடத்திற்கான தொடர்பாடல் திறன்
viii. A-01S003BU02 - மொழி எழுத்தறிவு மற்றும் எண்ணியல்
ix. A-01S003BU03 - குழு செயற்பாடு
x. A-01S003BU04 - தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின் பற்றுதல்

➢ துறைசார்ந்த உதவியாளர் ( விவசாய விஸ்தரிப்பு ) NVQ 4 க்கு உரிய பாடநெறிகள்

i. A-01S003U01 - விவசாயத்தின் அடிப்படைகள்
ii. A-01S003U02 - நெல் மற்றும் பிற பயிர்களை ஸ்தாபித்தில் மற்றும் பராமரித்தல்
iii. A-01S003U03 - மற்றைய துறைரீதியான பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல்
iv. A-01S003U04 - பூங்காப் பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல்
v. A-01S003U05 - அறுவடையும் மற்றும் ஆரம்ப நடைமுறைகளும்
vi. A-01S003U06 - பண்ணை இயந்திரங்கள் உபகரணங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு
vii. A-01S003U07 - விவசாய விரிவாக்கத் திட்டத்தை அமுல்படுத்தல்
viii. A-01S003BU01 - பணியிடத்திற்கான தொடர்பாடல் திறன்
ix. A-01S003BU02 - மொழி எழுத்தறிவு மற்றும் எண்ணியல்
x. A-01S003BU03 - குழு செயற்பாடு
xi. A-01S003BU04 - தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுதல்

• மேலே கூறப்பட்ட விடயங்களினூடாக பாட நெறிக்கு சமர்ப்பிக்கும் போது புதிய விவசாய தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு உரியதாக புதிய கண்டுபிடிப்புக்கள் (உதாரணம்:- விளைச்சல் தொழில்நுட்பம், மும்முறை செய்கை முறை), சுயதொழில் உபாய மார்க்கங்கள் (உதாரணம்:- நில அளவினை ஸ்தாபித்தல் பண்ணைக் கணக்கு, பண்ணை உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் உழவு இயந்திரத்தை செலுத்துவதற்கு பயிற்சி அழித்தல்) மற்றும் தகவல்களை தயாரித்தல், புதிய முறைகளுக்காக பயிற்சிகளை வழங்குதல் (உதாரணம்:- கணினிப் பாவனை) மேற்கொள்ளப்படும். அவ்வாறே மாணவ மாணவிகளின் ஆங்கில அறிவை மேம்படுத்த மற்றும் தற்போதைய தேவையாகக் காணப்படும் விவசாயக் கொள்கை தொடர்பாக அறிவொன்றினைப் பெற்றுக் கொடுப்பதுமாகும்.

• விடயத்திற்கு இணைந்த வகையில் , முன்னைய தொகுதி மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசளிப்பு வழங்கும் விழா, சிங்கள புது வருட விழா மற்றும் வருடாந்த பிரித் ஓதுதல் போன்ற குழு நடவடிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படும்.

• ஒரு வருட காலத்தைக் கொண்ட பாடநெறியானது முதல் 06 மாதம் மொடியுல் பயிற்சி பாடநெறி மிகுதி 6 மாத காலம் தொழிற் பயிற்சியையும் கொண்டது. இந்த மொடியுல் கால எல்லையினுள் தொடர்ச்சியான மதிப்பீடு இடம்பெறும். இந்த கால எல்லையினுள் கல்விச் சுற்றுலா திட்டமிடப்பட்டுள்ளது. பின்னர் ஒவ்வொரு மாணவ மாணவிகளும் தாம் தெரிவு செய்த விடய துறையினுள் வெளிவாரியான விவசாய இயக்கங்களுடன் / ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொள்ளச் செய்வதுடன் அதற்கிணங்க தொழிற் பயிற்சியினைப் பெற வேண்டும். எல்லா மாணவர்களும் கைத்தொழில் பயிற்சியின் இறுதியில் அவ்விடயம் பூர்த்தியானதும் அறிக்கை ஒன்றினைத் தயாரித்து முன்வைப்பது மற்றும் மதிப்பீட்டுச் சபைக்கு முன்னால் முன்வைப்பதும் இடம்பெற வேண்டும். இந்த விடயம் நிறைவடைந்ததும் (NVQ4) இறுதி மதிப்பீடு இடம்பெறும். பாடநெறியில் கலந்து கொள்வது 80% ஆக இருப்பது கட்டாயமாகும். பாடநெறியினை தொடர்ச்சியாக பூர்த்தி செய்யும் மாணவ மாணவிகளுக்கு பாடநெறியின் இறுதியில் மேல் மாகாண விவசாயத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்கப்படும். அவ்வாறே இந்த மாணவ மாணவிகளுக்காக மூன்றாம் நிலை கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் துறை சார்ந்த கள உதவியாளர் (விவசாயம்) NVQ4 மற்றும் துறை சார்ந்த கள உதவியாளர் (விவசாய விஸ்தரிப்பு) NVQ4 மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி தகைமைச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்படும்.

03. **ஆட்சேர்ப்பு விதி முறைகள் :-**

03.1 **அடிப்படைத் தகைமை :**

I. க.பொ.த. (சா/த) இரண்டு 02 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

II. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்தில் விவசாயத் துறையில் நேரடி தொடர்புடைய NVQ3 பாடநெறி ஒன்று (உதா. கள உதவியாளர்( விவசாயம்) , நாற்று மேடை மேப்பாட்டு உதவியாளர், நில ஒழுங்கமைப்பு மேம்பாட்டு உதவியாளர்....போன்றன) ஒழுங்காக பூர்த்தி செய்திருத்தல்.

❖ க.பொ.த. (சா/த)/க.பொ.த. (உ/த) பரீட்சையில் விவசாயப் பாடத்தைக் கற்றிருப்பது விசேட தகைமையாகக் கருதப்படும்.

3.2 **பிற தகைமைகள் :**

I. எல்லா விண்ணப்பதாரிகளும் விண் ணப்பம் கோரப்படும் தினத்தில் 16 தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

II. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினத்தில் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

III. நிரந்தர வசிப்பிடம் தொடர்பாக கிராம அலுவலரின் சான்றிதழ் சமர்ப்பிக் கப்பட வேண்டும்.

IV. விண்ணப்பதாரிகள் திருமணமாகாதவர் களாக இருக்க வேண்டியதுடன் பயிற்சிக் காலத்தில் திருமணமாகாது இருக்க வேண்டும்.

V. பிரயோக ரீதியிலான விவசாய செயற்பாடுகளில் ஈடுபட சிறந்த உடல் தேகாரோக்கியம் பெற்றவராக இருக்க வேண்டும் (இதனை உறுதிப் படுத்துவதற்காக அரசாங்க வைத்திய உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் ஒன்று பாடநெறி பதிவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

VI. தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மேல் மாகாண விவசாயப் பணிப்பாளரினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

04. **பாடநெறிக்குரிய ஊக்குவிப்புப் படி :**

I. பயிற்சிக் காலத்தினுள், தங்கி நடவடிக்கைகளில் பங்குபற்றும் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூபா ஐந்நூறு (ரூ.500/-) பயிற்சி நெறி ஊக்குவிப்பு படி செலுத்தப்படும்.

II. அது தவிர உணவுப் பானங்களுக்காக அல்லது வேறு எந்தப் படியும் வழங்கப்படமாட்டாது. எனினும் தேவைப்படின் குழு ஒன்றாக சமையலாளர் ஒருவரின் சேவை ஒன்றினை வழங்க முடியும்.

III. பயிற்சி பெறும் காலத்தினுள் எல்லா மாண வருக்கும் கட்டணமின்றி விடுதி வசதி வழங்கப்படும்.

05. பாடநெறியில் கலந்து கொள்ளும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் :

I. பயிற்சியாளர்களுக்கு பயிற்சியின் முடிவில் திரும்ப செலுத்தப்படும் பாதுகாப்பு வைப்புத் தொகையாக இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூ.2500.00) வைப்புச் செய்யப்பட வேண்டும்.

II. பயிற்சிக்குப் பதிவு செய்த பிறகு, அவர் கற்கை நெறியை விட்டு வெளியேற மாட்டார் என்று பொதுச் சேவையில் உள்ள ஒரு பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது இரண்டு பதவி நிலை உத்தியோகத்தர் அல்லாது அரசாங்க அலுவலர்கள் கையெழுத்திட்ட பத்தாயிரம் ரூபா (ரூ. 10,000.00) உத்தரவாதப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

III. பயிற்சியின் பின்னர் அரசாங்க சேவையில் வேலை ஒன்றை வழங்க, மேல் மாகாண சபையோ மத்திய அரசோ உட்பட்டிருக்கவில்லை என்பது விஷேடமாக வலியுறுத்தப்படுகின்றது.

IV. பயிற்சி பாடநெறி நடைபெறும் காலத்தினுள் ஸ்தாபனத்தினால் பேணப்படும் பொதுச் சட்டதிட்டங்களுக்கு இணங்குவதாக எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்.

V. பயிற்சிப் பாடநெறி நடைபெறும் காலத்தினுள் ஒழுக்கமின்மை மற்றும் சட்டதிட்டங்களுக்கு முரணாக செயற்பட்டால் அங்கத்துவத்தை இரத்துச் செய்வதற்கு அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

06. இங்கு கீழே காணப்படும் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 8 ½ X 12 (A4) அங்குல அளவிலான கடதாசியில் இரண்டு பக்கங்களை உபயோகித்து 2026.01.23 ஆந் திகதி அல்லது அதற்கு

முன்னர் பாடசாலை விடுகைப் பத்திரம் மற்றும் கல்விச் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து "மாகாண விவசாயப் பணிப்பாளர் (மேல் மாகாணம்), மாகாண விவசாயப் பணிப்பாளர் காரியாலயம், 07ஆவது மாடி, இலக்கம் 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல", என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது pdagriwp@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலதிக தகவல்களை பெற மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்க https://agridept.wp.gov.lk வலைத்தளத்திலிருந்து பெறவும்.

உங்கள் விண்ணப்பத்தை பதிவு தபால் மூலம் அனுப்பும் போது, விண்ணப்பப்படிவம் இடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "விவசாயப் பயிற்சி பாடநெறி 2026 " என்று எழுதவும்.

07. I. ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதி முடிவு மேல் மாகாண விவசாயப் பணிப்பாளருக்கு உரியதாகும்.

II. ஒழுங்கற்ற தவறான விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

III. அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

i. தற்போது பாடசாலையில் இருந்து விலகிச் சென்றுள்ள மாணவ /மாணவிகள் ஆர்வம் காட்டுகின்றபடியால் நேர்முகப் பரீட்சையின் போது பாடசாலையை விட்டு விலகிச் சென்ற சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ii. தாம் கல்வி பயின்ற பாடசாலை மற்றும் பிரதேசத்தின் சமய தலைவர் ஒருவரின் அல்லது நன்மதிப்பைப் பெற்ற அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு சான்றிதழ்கள், கல்வித் தகைமை மற்றும் வேறு தகைமைகளுக்குரிய சான்றிதழ்கள்.

iii. தேசிய ஆளடையாள அட்டை.

iv. வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு தாம் நிரந்தரமாக வசிக்கும் பிரதேசத்தின் கிராம அலுவலகரிடமிருந்து பெற்ற சான்றிதழ்.

v. மேற் கூறப்பட்ட சான்றிதழ் மற்றும் ஏனைய ஆவணங்களின் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பதிவு செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

i. நடைமுறை விவசாயத்தில் ஈடுபடுவதற்கு, அவர் உடல் நலத்துடன் இருப்பதாகச் சான்றளிக்க, அரசாங்க மருத்துவ அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ்.

ii. உரிய சான்றிதழ் மற்றும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதிகள்.

* இந்த அறிவிப்பின் கீழ் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் நூல்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், சிங்கள அறிவிப்பு மேலோங்கும்.

எஸ்.பி.ஏ.எம்.ஏ.எம். குணவர்தன,
மாகாண விவசாயப் பணிப்பாளர்,
மேல் மாகாணம்.

மாகாண விவசாயப் பணிப்பாளர்
காரியாலயம் (மேல் மாகாணம்),
07ஆவது மாடி,
இலக்கம் 204,
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2026, சனவரி 02.

**ஹோமாகம (ஆண்) வல்பிட (பெண்) மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களில் ஒரு வருட தொழிற்பயிற்சி விவசாயப் பயிற்சி பாடநெறி மற்றும் இணைந்த "துறைசார் உதவியாளர் (விவசாய விஸ்தரிப்பு)" தேசிய தொழில் தகைமை (NVQ4) பயிற்சி பாடநெறி -2026**

**2026 ஆண்டிற்காக மாணவர்களை இணைத்துக் கொள்ளும் மாதிரி விண்ணப்பப்படிவம்**

<u>**விண்ணப்பத்தாரி பற்றிய தகவல்**</u>

1. முழுப் பெயர்( சிங்களத்தில்) : ..................................
........................................................................
........................................................................
........................................................................

2. (I) முகவரி : ..................................................
..................................................
..................................................
..................................................
..................................................

(II) மாவட்டம் : ..................................................
..................................................

(III) மாகாணம் : ..................................................
..................................................
..................................................

3. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :

4. முதலெழுத்துடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில் ) :

5. கையடக்க தொலைபேசி இலக்கம்:

6. இல்லத் தொலைபேசி இலக்கம்:

7. மின்னஞ்சல் முகவரி:........................................................................................................................................................

8. பெண் /ஆண் : பெண் ☐ ஆண் ☐

9. பிறந்த திகதி : வருடம்: மாதம் : திகதி :

10. (I) தேசிய ஆளடையாள அட்டை இல:

(II) அடையாள அட்டை வழங்கிய ஸ்தாபனம் மற்றும் திகதி: ..............................................................................
..............................................................................................................................................................

11. தந்தை அல்லது பாதுகாவலர் பெயர்: ..........................................................................................................

12. தந்தை அல்லது பாதுகாவலரின் முகவரி: ....................................................................................................

13. தாயின் பெயர்:..............................................................................................................................................

14. தாயின் தொலைபேசி இலக்கம்:

15. அவசர சந்தர்ப்பத்தில் அறிவிக்கப்பட வேண்டிய நபர்கள் : பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம்:

பெயர் : ..........................................................................................................

தொலைபேசி இலக்கம்:

16. கல்வித் தகைமை :

(அ) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சை
முதலாம் அமர்வு : (................. வருடம் ) பரீட்சைச் சுட்டெண்: (..........................)

| *பாடம்* | *பெறுபேறு* | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10 | |

(ஆ) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சை :
இரண்டாம் அமர்வு : (................ வருடம் ) பரீட்சைச் சுட்டெண் : (..............................)

| *பாடம்* | *பெறுபேறு* | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10 | |

(இ) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சை
(......... வருடம் ) பரீட்சைச் சுட்டெண்: (…………….)

| *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(ஈ) பிற கல்வித் தகைமைகள் ( உதாரணம் க.பொ.த. சா.த வரை) : தயவுசெய்து விபரிக்கவும்:

17. தொழிற் கல்வித் தகைமைகள்( பூர்த்தி செய்யப்பட்டுள்ள NVQ 3 பயிற்சிப் பாடநெறி மற்றும் வேறு பாடநெறி):

I.
II.
III.

18. வேறு கல்வித் தகைமை மற்றும் வேறு செயற்பாடுகள் :

I.
II.
III.
IV.
V.

19. நீங்கள் உயர்கல்வி நிறுவனம் ஒன்றிலோ தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றிலோ/ ஸ்தாபனம் ஒன்றிலோ பாடநெறிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளீரா? அப்படியாயின் அது தொடர்பான விபரத்தைக் குறிப்பிடுங்கள்.

……………………………………………………………………………………………………………………………………

மேலே கூறப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். ஏதாவதொரு தகவல் பொய்யானதென என்னைத் தெரிவு செய்த பின் வெளியாகினால் எந்தவொரு விசாரணையுமின்றி எனது பயிலுநர் நிலைமை இரத்தாகும் என்பதனையும் அறிவேன்.

........................................... ...................................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

## விவசாய, கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழுள்ள நீர்பாசனத் திணைக்களத்தில் தொழில்நுட்ப உதவியாளர் (நீர்ப்பாசனம்) (Technical Aide - Irrigation) III மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்) (Technical Aide - Mechanical) III ஆம் தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2025

விவசாய, கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நிலவுகின்ற நீர்பாசனத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகள் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026, ஏப்பிறல் மாதத்தில் கொழும்பு மாவட்டத்தில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

- ❖ விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.donets.lk என்ற இணையத் தளத்தில் "Our Services" என்பதன் கீழுள்ள "Online Applications - Recruitment Exams/E.B. Exams" இனூடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை இணையவழி முறைமை (Online) ஊடாக மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இணையவழி முறைமை மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது 2026, சனவரி மாதம் 12 ஆந் திகதி மு.ப 9.00 மணிக்கு திறக்கப்பட்டு 2026, பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி பி.ப 9.00 மணிக்கு முடிவடையும்.
- ❖ ஏற்கனவே, அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பத்தின் பிரதியொன்றை தமது பிரத்தியேக கோவையினுள் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் வழங்குதல் வேண்டும் என்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்திய விண்ணப்பப் பிரதியுடன், சேவையை நிரூபிப்பதற்கான கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ❖ விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு இறுதி தினம் வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் பாதகமான நிலையினை விண்ணப்பதாரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**1.0 ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பதவிகள்:**

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *ஆட்சேர்க்கும் தரம்* |
|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப உதவியாளர் (நீர்ப்பாசனம்) | 13 | III ஆம் தரம் |
| 02 | தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்) | 08 | III ஆம் தரம் |

1.1 பதவிக்குரிய கடமைகளின் தன்மை :

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *குறித்தொதுக்கப்படும் பணிகள்* |
|---|---|---|
| 01 | தொழில்நுட்ப உதவியாளர் (நீர்ப்பாசனம்) | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர்களின் மேற்பார்வையின் கீழ் குறித்தொதுக்கப்படும் கீழே குறிப்பிட்ட பணிகள்,<br>• துறையில் உள்ள புதிய நிர்மாணம், அபிவிருத்தி செய்தல் மற்றும் பழுதுபார்த்தல்களுக்கான வேலைகளைப் பரீட்சித்தல்.<br>• நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட தரநிர்ணயத்திற்கேற்ப அந்த நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்.<br>• உரிய துறையில் நீர்ப்பாசனம் மற்றும் உயர்த்தல் நீர்ப்பாசனம் (Lift Irrigation), வெள்ளத் தடுப்பு போன்ற திட்டங்களில் செயற்பாடு மற்றும் பராமரித்தல் பணிகளை பரீட்சித்தல்.<br>• நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய நீர்ப்பாசனம், உயர்த்தல் நீர்ப்பாசனம் (Lift Irrigation), வெள்ளத் தடுப்பு மற்றும் உவர் நீர்த் தடுப்புத்திட்டம், கட்டிடம், பாதைகள் மற்றும் அவற்றுக்குரிய ஒதுக்கு நிலங்கள் பற்றி அவதானத்துடன் இருத்தல் மற்றும் அவற்றைப் பாதுகாத்தல். |

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *குறித்தொதுக்கப்படும் பணிகள்* |
|---|---|---|
| 02 | தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்) | இயந்திரவியல் வேலைத்தளத்திற்கு பழுதுபார்த்தலுக்காக கொண்டு வரப்படும் வாகனங்களைப் பொறுப்பெடுத்தல்<br>இயந்திரவியல் பிரிவிற்கு நியமிக்கப்படும் கனிஷ்ட ஊழியர்களின் கடமைகளை கண்காணித்தல் |

2.0 **ஆட்சேர்க்கும் முறை :**

2.1 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும். எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்ப தாரர்களில் மொத்தப் புள்ளிகளின் திறமை களுக்கு இணங்க ஆட்சேர்ப்பதற்கு எதிர் பார்க்கப்படும் தொகையில் இரண்டு மடங்கு விண்ணப்பதாரர்களை சாதாரண நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தி தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

2.2 சாதாரண நேர்முகப் பரீட்சையானது விண்ணப்பதாரர்களின் உடல் ரதீயான தகுதியையும் மற்றும் சான்றுப்பத்திரங்கள் பரிசீலித்துப்பார்க்கப்படுவதோடு அதற்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

2.3 நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் சம்மதத்தைப் பெற்ற பின்னர் பரீட்சைக்கு சமூகமளித்த சகல விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட ரீதியாக அல்லது நிரல்நிலை மூலம் பெறுபேறு வெளியிடப்படும்.

3.0 **சம்பள அளவுத்திட்டம் :**

பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் உப பிரிவு 1 இற்கிணங்க பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 50,090 - 10 x 540 - 11 x 630 - 10 x 1010 - 10 x 1190 - ரூபா 84,420.00 ஆகும். (MT1-2025)

4.0 **சேவைத் தொகுதி :**

முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப தொகுதி 3

4.1 தரம் - III ஆம் தரம்
II ஆம் தரம்
I ஆம் தரம்

5.0 **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

5.1 இப்பதவி நிரந்தரமானது. இருப்பினும் மூன்று (03) வருடங்களுக்கு தகுதி காண் காலத்திற் குட்பட்டதாகும்.

5.2 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியமுடையது. உரிய ஓய்வூதியத் திட்டம் பற்றி அரசாங் கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும்.

5.3 தொழில்நுட்ப உதவியாளர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 வருடத்திற்குள் ஆட்சேர்த்தல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்க முதலாவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5.4 பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இற் கிணங்கவும் அதனோடிணைந்த சுற்றறிக்கை களுக் கிணங்கவும் தமக்குரிய அரசகரும மொழி தேர்ச்சியை உரிய காலத்தில் பெறுதல் வேண்டும்.

5.5 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சேவைத் திட்டத்தின் ஒழுங்குகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

6.0 **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்தினத் திற்கு 18 வயதிற்குக் குறையாமலும் 35 ஐ விட அதிகரிக்காமலும் இருக்க வேண்டும்.

- ❖ அதற்கிணங்க 2008.02.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1991.02.06 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரான பிறந்த திகதிக்குரியவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப் பிக்கத் தகைமையுடையவர்களாவர்.

7.0 **தேவையான தகைமைகள் :**

7.1 **கல்வித் தகைமைகள்** - தொழில்நுட்ப உதவி யாளர் (நீர்ப்பாசனம்) / தொழில்நுட்ப உதவி யாளர் (இயந்திரவியல்)

கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வாறு மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட ஆறு (06) பாடங்களில சித்தியடைந்திருத்தல்.

7.2 **தொழிற்சார் தகைமைகள் -**

**தொழில்நுட்ப உதவியாளர் (நீர்ப்பாசனம்)** :

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் மூன்று வருடங்கள் பகுதி நேர தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் சிவில் (NCT - civil) கற்கை நெறியை பூர்த்திசெய்து அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது மேலே 7.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளின் அடிப்படையில் பயிலுநர் தொழில்நுட்ப உதவியாளர் (நீர்ப்பாசனம்) என்ற அடிப்படையில் நீர்ப்பாசனத் திணைக் களத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு நீர்ப்பாசன பயிற்சி நிறுவகத்தில் கோட்பாடு மற்றும் பிரயோக பயிற்சியைப் பெற்று தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் சிவில் (நீர்ப்பாசன தொழில்நுட்பம்) (NCT - civil) கற்கை நெறியை பூர்த்திசெய்திருத்தல் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் அதற்குச் சமனான சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்)** :

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் மூன்று வருடங்கள் பகுதி நேர தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் சிவில் (NCT - Mechanical) கற்கை நெறியை பூர்த்திசெய்து அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் அதற்குச் சமனான சான்றிதழைப் பெற்றிருத்தல்.

7.3 **தேகாரோக்கிய தகைமைகள்** :

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவைப் புரிவதற்கும், பதவிக் குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உளரீதியாக தகுதி யுடையவராக இருத்தல் வேண்டும்.

7.4 **ஏனைய தகைமைகள்** :

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை யுடையவராக இருத்தல்.

III. ஏதேனும் ஒரு மதத்திற்குரிய மதப் போதகர் எவரும் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமை பெற்றவர்கள் அல்ல.

IV. போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்ப தற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப் படுவது, விண்ணப்பதாரர் உரிய அனைத் துத் தகைமைகள் விண்ணப்பங்கள் கோரப் படும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தினத்திற்கு அனைத்து விதத்திலும் பூரணப் படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே ஆகும்.

8.0 **பரீட்சையின் செயற்திட்டம்** :

பரீட்சையானது இரு பாடங்களைக் கொண்ட எழுத்து மூலப் பரீட்சையாகும். இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படுவதோடு விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| *வினாப்பத்திரம் / பாடப்பரப்பு* | *காலம்* | *புள்ளி கள்* | *சித்தி யடை யும் புள்ளி கள்* |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | ஒரு (01) மணித் தியாலம் | 100 | 40 |
| 2. பாடப்பரப்புக்குட் பட்ட தொழில் நுட்பப் பரீட்சை | மூன்று (03) மணித் தியாலம் | 100 | 40 |

8.1 **பரீட்சைக்கான பாடப்பரப்பு:**

**தொழில்நுட்ப உதவியாளர் (நீர்ப்பாசனம்) - III ஆம் தரம் :**

1. நுண்ணறிவுப் பரீட்சை :

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | விண்ணப்பதாரரின் சிந்தனை மற்றும் தர்க்க ரீதியானதும் மற்றும் அவரது பகுப்பாய்வு நிலமை தீர்மானித்தல் திறன் மற்றும் அவரது முடிவுகள் எடுக்கும் தீர்மானம் போன்ற வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரமாகும். |

2. பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை :

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| பாடப்பரப்புக் குட்பட்ட தொழில் நுட்பப் பரீட்சை | அடிப்படைக் கணித அறிவு மற்றும் அடிப்படை சிவில் பொறியியல் அறிவு என்பவற்றைப் பரீட்சிப்பதற்கான வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரமாகும் |

**தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்) - III ஆம் தரம் :**

1. நுண்ணறிவுப் பரீட்சை :

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | விண்ணப்பதாரரின் சிந்தனை மற்றும் தர்க்க ரீதியானதும் மற்றும் அவரது பகுப்பாய்வு நிலமை தீர்மானித்தல் திறன் மற்றும் அவரது முடிவுகள் எடுக்கும் தீர்மானம் போன்ற வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரமாகும். |

2. பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை :

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| பாடப்பரப்புக் குட்பட்ட தொழில் நுட்பப் பரீட்சை | அடிப்படைக் கணித அறிவு மற்றும் அடிப்படை சிவில் பொறியியல் அறிவு என்பவற்றைப் பரீட்சிப்பதற்கான வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரமாகும் |

06. **விண்ணப்பிக்கும் முறை :**

9.1 இணையவழி (Online) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி ஊடாக அனுப்பப்படும் மென்பிரதி மற்றும் செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவம் என திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டதாக/ பொறுப்பேற்கப்படவில்லை என தொகுதியினுள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி இலக்கத்துக்கு குறுஞ்செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் (E-Mail) ஊடாக அறியத்தரப்படும். இணையவழி விண்ணப்பத்தை பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரம் (instructions) இனைப் பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். விண்ணப்பத்தை நிரப்பும் போது அவ்வறிவுறுத்தல்களை கட்டாயமாக பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றதன் பின்னர் அதில் மேற் கொள்ளப்பட்டுள்ள ஏதேனும் ஒரு திருத்தம் செல்லுபடியாகும் ஒரு திருத்தமாக கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. முழுமைப்படுத்தாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

9.2 விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவது தொழில்நுட்ப உதவியாளர் (நீர்ப்பாசனம்) பதவிக்காக அல்லது தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்) பதவிக்காக என்பதை விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் (✓) என்ற அடையாளத்தின் மூலம் தெளிவாக அடையாளமிடுவது கட்டாயமானதாகும்.

9.3 விண்ணப்பதாரி பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் தமது ஒப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதோடு, பரீட்சைத் தினத்தில் மண்டபப் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவ்வாறு ஒப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையாகும். ஒப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ளாத அனுமதி அட்டையைக் கொண்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

9.4 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற யூகத்தின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணம், சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்ப தாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் இணையவழி ஊடாக மாத்திரம்/அனுப்பி

வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட்டவுடன் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் அது பற்றி குறிப்பிட்டு இணையத்தளத்தில் அறிவித்தல் ஒன்றின் மூலம்/ விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ் செய்தியொன்றின் மூலம் அறிவித்தல் வழங்கப்படும். தமது அனுமதிப்பத்திரத்தைப் பெறாத பரீட்சார்த்தியாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் தாபன பரீட்சைகள் அமைப்புப் பிரிவிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப் பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்ப தாரியின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை நேர்த்தியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், அவ்விபரங்களுடன் கோரிக் கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்து விசாரிப்பது மிகவும் பயனுள்ள தாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரி நிற்கும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரியினால் தம்வசம் வைத்துக் கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி வைத்திருப்பது பிரயோசனமாக அமையும்.

9.5 பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்குதல், பரீட்சைக்குத் தோற்று வதற்காக அல்லது பதவியில் அமர்த்துவதற்கு தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாக கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

9.6 அனுமதிப்பத்திரத்தைப் பரீட்சித்துப் பார்த்து திருத்தங்கள் செய்ய வேண்டியதாக ஏதேனும் இருந்தால் பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கு ஏற்ப குறித்த திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தத்திற் காக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் நிரா கரிக்கப்படும்.

9.7 சகல விண்ணப்பதாரிகளும் இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுப்பது குறித்து இணங்கி யொழுகுதல் வேண்டும்.

10. **பரீட்சைக் கட்டணம் :**

❖ பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது இணையவழியின் ஊடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டண செலுத்துகை முறைக்கு ஏற்ப மாத்திரமே செலுத்தப்படுதல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கிக் கடன் அட்டையின் மூலம் (Any Bank Credit Card);

ii. இணையவழி செலுத்துகை வசதியுடன் கூடிய எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கி ஆன்லைன் வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)

iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:

(அ) மேற்படி முறைமை மூலம் கட்டணம் செலுத்தப்படும் விதம் குறித்த அறிவுறுத் தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்கு உரித்தான தொழில்நுட்ப ஆலோசனை என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுஞ் செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அல்லது அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையையும் செலுத்துதல் வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கட்டண செலுத்துகை முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படுகின்ற கோளாறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாதது.

(இ) பரீட்சைக்கு செலுத்தப்படும் தொகை எவ்விதக் காரணமும் இன்றி மீள செலுத்தவோ அல்லது மற்றொரு பரீட்சைக்கு மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

11. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

11.1 பரீட்சார்த்தி/பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத் தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருபதியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு ஆவணம் மாத்திரம் செல்லுபடி யாகும்.

i. தேசிய ஆளடையாள அட்டை;

ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;

iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே, பரீட்சார்த்தியின் ஆளடையாளத் தையும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்கள் அணியப்படவில்லை என்று உறுதிப்படுத்த முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப் படுத்துவதற்கு நிராகரிக்கும் விண்ணப்பதாரி

பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளங்காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

12. **போலியான தகவல்களுக்கான தண்டனை :**

12.1. எவரேனும் ஒரு பரீட்சார்த்திக்கு தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து கொண்டு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ்வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.

13. **பொதுவான விடயங்கள்:**

13.1. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். இச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக நேரிடும். பரீட்சைப்பெறுபேறு தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

13.2. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் காணப்படின் அது பற்றியும் இந்த வெற்றிடங்களை நிரப்புவது பற்றியும் அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் முடிவெடுக்கப்படும்.

13.3. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமே சரியானது எனக்கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

கலாநிதி (எந்திரி) கித்சிறி வெலிகேபொலகே,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 07,
2025, திசெம்பர் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விவசாய, கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**நீர்பாசனத் திணைக்களத்தில் தொழில்நுட்ப உதவியாளர் (நீர்ப்பாசனம்) (Technical Aide - Irrigation) மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்) (Technical Aide - Mechanical) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2025**

☐
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2 ☐
(உரிய கட்டத்திற்குள் எழுதவும்)

2. விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்: ....................................................

3. முதலெழுத்துக்களுடன் பெயர்(முதலெழுத்துக்கள் பெயருக்குப் பின்னால் ) :
(திரு./திருமதி/செல்வி)
சிங்களத்தில் /தமிழில் : ..........................................................................................................................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) : ..........................................................................................................
(உதாரணம். PERERA, A.B.C)

3.1. முழுப்பெயர் :
சிங்களத்தில் / தமிழில்:
..........................................................................................................................................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):
..........................................................................................................................................................

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

5. ஆண்/பெண் பற்றி (உரிய கட்டத்திற்குள் எழுதவும்)

ஆண் - M

பெண் - F

6. நிரந்தர முகவரி: ( தெளிவான எழுத்துக்களில்)

சிங்களத்தில் / தமிழில் : ...................................................................................................................................................
...................................................................................................................................................

ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :......................................................................................................................
...................................................................................................................................................

6.1. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி:
சிங்களத்தில் / தமிழில்:
...................................................................................................................................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):
...................................................................................................................................................

7. தொலைபேசி இலக்கம் : நிலையான தொலைபேசி :..................................... கையடக்க :................................................

8. வதிவிடம் :

8.1. வதிவிட மாவட்டம் : .................................................................

8.2. பிரதேச செயலாளர் பிரிவு : .................................................................

9. குடியியல் நிலை :

திருமணமாகாதவர் - 1 திருமணமானவர் - 2

10. பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

10.1. விண்ணப்பம் ஏற்றக்கொள்ளும் இறுதித்தினத்தன்று வயது (2026.02.06 ) :

வருடங்கள்: | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

11. கல்வித் தகைமைகள்:

11.1 க.பொ.த(சா.த) பரீட்சை பற்றிய விபரம்
முதலாம் அமர்வு
I பரீட்சையின் வருடமும் மாதமும்........................
II சுட்டெண் .............................................
III பெறுபேறு .............................................

| *பாடங்கள்* | *தரம்* | *பாடங்கள்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10 | |

11.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரம் :
இரண்டாம் அமர்வு
I பரீட்சையின் வருடமும் மாதமும்........................
II சுட்டெண் .............................................
III பெறுபேறு .............................................

| *பாடங்கள்* | *தரம்* | *பாடங்கள்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10 | |

12. தொழில்சார் தகைமைகள் :

| *மேற்கொண்டுள்ள கற்கை நெறி* | *வழங்கிய நிறுவனம்* | *கற்கை நெறிக்கான கால எல்லை* | *சான்றிதழின் இலக்கமும் திகதியும்* |
|---|---|---|---|
| | | | |

(உரிய சான்றிதழ் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)

13. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

........................................................................................ ஆகிய நான், இதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என உறுதி கூறுகிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டவரோ அல்லது அனுதாப மாற்றீடாக செயற்திறனின்மையின் பொருட்டு சேவையிலிருந்து ஓய்வு பெற்றவரல்லர் எனவும், பதவியை விட்டு விலகிச் சென்றவராக கருதப்படவுமில்லை எனவும் உறுதி கூறுகிறேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் ஏதாவது பொய்யானது அல்லது தவறானது என, நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் ஆட்சேர்ப்பதற்கு தகுதியற்றமைக்கு ஆளாவேன் என்பதையும், தெரிவு செய்யபட்ட பின்னர் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்டயீடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும், நான் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் நாட்டின் எப்பிரதேசத்திலும் நீர்ப்பாசனத் துறையின் வேலைத்தளங்களில் சேவையாற்றவும் உடன்படுகின்றேன்.

......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ......................................

14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ………………………………………… என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும் அவர் ……………………… ஆம் திகதி எனது முன்னிலையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 13 ஆம் பந்திக்கிணங்க கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

உறுதிப்படுத்துபவரின் பெயர்:...................................................
பதவி: : ....................................................
முகவரி: : ....................................................
(அலுவலக முத்திரை இடவும்)

15. திணைக்கள /நிறுவனத் தலைவரின் சான்றிதழ் : (தற்போது சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும்)

திரு./திருமதி/செல்வி……………………………………என்பவர்……………………………………………………….. நிறுவகத்தின்/திணைக்களத்தின் / அமைச்சில் சேவையிலுள்ள பதவியை வகிக்கின்றார் எனவும் அவரின் வேலை, நடத்தை என்பன திருப்தியானது எனவும் அவர் தொடர்ச்சியாகவும் திருப்தியாகவும் 10 வருட கால சேவையைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் அவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை / எடுக்கப்பட உத்தேசிக்கப்படவுமில்லை எனவும், இப்பதவிக்காக இவர் தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும் /முடியாது எனவும் மேலும் உறுதியளிக்கின்றேன்.

......................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும்
அலுவலக முத்திரை

திகதி : ..........................................

01-79

## நிதி ஆணைக்குழுவில் இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் III ஆந் தர பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025

நிதி ஆணைக்குழுவில் நிலவும் மேற்குறிப்பிட்ட பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக் காக தகுதியினைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026 மே மாதம் கொழும்பு மாவட்டத்தில் நடைபெறும். இப்பரீட்சையினை ஒத்திவைப்பதற்கு அல்லது இரத்து செய்வதற்கு நிதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

❖ விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத் தளத்தின் “our services” இன் கீழுள்ள “Online Applications – Recruitment Exams/ E.B.Exams” ஊடாக வெளியிடப்பட்டுள்ளதோடு விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலை (Online) முறை மூலம் மாத்திரமே முன்வைக்க முடியும்.நிகழ்நிலை விண்ணப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் கால அவகாசம் 2026, சனவரி 12 ஆந் திகதி மு.ப.9.00 மணிக்கு ஆரம்பித்து 2026 பெப்புருவரி 06 ஆந் திகதி பி.ப.9.00 மணிக்கு நிறைவுறும்.

❖ ஏற்கனவே அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றினை தனது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்குவதற்காக நிறுவனப் பிரதானிக்குக் கையளிக்க வேண்டும். அத்தோடு நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவன பிரதானியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்று மற்றும் சேவை உறுதிப்படுத்தல் கடிதமொன்று முன்வைக்கப்பட வேண்டும்.

❖ விண்ணப்பப்படிவங்களை முன்வைப்பதற்கான இறுதித் திகதி வரையில் தாமதப்படுத்துவதினால் ஏற்படும் எந்தவொரு தீங்கான நிலைமையும் விண்ணப்பதாரியினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

**1.0. ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் :**

விண்ணப்பதாரிகள் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினத்திற்கு அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**1.1. பொதுவான தகைமைகள்:**

1.1.1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

1.1.2. சிறந்த நன்னடத்தையுடன் கூடியவராக இருக்க வேண்டும்.

1.1.3. ஏதேனும் மதத்திலோ/மதப்பிரிவு ஒன்றில் துறவறம் பூண்டவராக இருக்கும் எந்தவொரு நபரும் இந்த பரீட்சைக்குத் தோற்ற தகுதியற்றவர் ஆவர்.

1.1.4. குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகுதிகளையும், விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு வயதெல்லையை அனைத்து விதங்களிலும் பூர்த்தி செய்துள்ள சந்தப்பத்தில் மட்டுமே விண்ணப்பதாரி சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகுதிகளைப் பூரணப்படுத்தியுள்ளதாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

**1.2. உடற்றகைமைகள் :**

விண்ணப்பதாரிகள் இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் பணிபுரியவும் பதவியின் பணிகளை சிறப்பாகச் செய்வதற்கு போதுமானளவு உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினையும் கொண்டிருக்க வேண்டும்

**1.3. வயதெல்லை:**

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு 18 வயதிற்குக் குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாவதராகவும் இருத்தல் வேண்டும்.

**1.4. கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் :**

1.4.1. இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III (திறந்த)

1.4.1.1. **கல்வித் தகைமைகள் :**

- கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சை கணிதப்பாடப் பிரிவில் தூய கணிதம்/ நடைமுறை கணிதம்/ இணைந்த கணிதம் மற்றும் பௌதிகவியல் அல்லது தொழில்நுட்ப பாடப்பிரிவில் பொறியியல் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் உள்ளடங்கலாக மூன்று பாடங்களில் (03) ஒரே தடவையில் சித்தியெய்துதல்.

மற்றும்

- சிங்களம் /தமிழ் /ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலுமொரு பாடத்திற்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (06) கல்விப் பொதுத் தராதர (சாதாரணதரப்) பரீட்சையில் சித்தியெய்துதல்.

1.4.1.2. **தொழில்சார் தகைமைகள்:**

மேற்குறிப்பிட்ட கல்வித்தகைமை களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில் சார் தகைமைகளுள் ஒரு தகைமையினை விண்ணப்பதாரி பெற்றிருக்க வேண்டும்.

- மொரட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்பவியல் டிப்ளோமா (சிவில்)

அல்லது

- தேசிய பயிலுனர் மற்றும் கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை யினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா

அல்லது

- கல்வி மற்றும் உயர்கல்வி அமைச் சினால் வழங்கப்படும் உயர் தேசிய பொறியியல் பாடநெறி (சிவில்)

அல்லது

- இலங்கை திறந்த பல்கலைக்கழகத் தினால் வழங்கப்படும் தொழில் நுட்பவியல் டிப்ளோமா (சிவில்)

அல்லது

- இலங்கை பொறியியலாளர் நிறு வனத்தினால் நடாத்தப்படும் பொறி யியலாளர் பரீட்சையின் 1 ஆம் பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல் (சிவில்)

அல்லது

- தொழில் துறைக்கு ஏற்றவாறு தேசிய தொழில் தகுதியின் (NVQ) 06 மட்டத்தின் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் (சிவில் துறையில்)

அல்லது

- உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக் களை கேட்டறிந்த பின்னர் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து விதத்திலும் பொருந்துமென மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல் (சிவில் துறையில்)

1.4.2. **பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சி காலம்)**

1.4.2.1. **கல்வித் தகைமைகள் :**

- கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சை கணிதப்பாடப் பிரிவில் தூய கணிதம் / நடைமுறை கணிதம்/இணைந்த கணிதம் மற்றும் பௌதிகவியல் அல்லது தொழில்நுட்ப பாடப்பிரிவில் பொறியியல் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பவியளுக்கான விஞ்ஞானம் உள்ளடங்கலாக மூன்று பாடங்களில் (03) ஒரே தடவையில் சித்தியெய்துதல்.

மற்றும்

- சிங்களம் / தமிழ் / ஆங்கிலம், விஞ்ஞானம் ,கணிதம் மற்றும் மேலுமொரு பாடத்திற்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (06) கல்விப் பொதுத் தராதர (சாதாரணதரப்) பரீட்சையில் சித்தியெய்துதல்.

1.4.2.2. **தொழில்சார் தகைமைகள் :**

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கைத்தொழிற் பயிற்சி கல்லூரியொன்றில் தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் பாடநெறியினை (சிவில் பொறி யியலாளர்) வெற்றிகரமாக பூர்த்தி செய்து தேசிய தொழில்நுட்ப சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கைத்தொழிற் பயிற்சி கல்லூரியொன்றில் தொழில் நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பாடநெறியினை (சிவில்) வெற்றிகரமாக பூர்த்தி செய்து உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

- உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறு வனங்களிடமிருந்து கருத் துக்களை கேட்டறிந்த பின்னர் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து விதத் திலும் பொருந்துமென மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி

ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள் ளப்பட்ட ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல் (சிவில் துறையில்)

2.0. **ஆட்சேர்ப்பு முறை :**

2.1. இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III இற்கு மற்றும் பயிற்சி பெறும் தரத்திற்கு திறந்த முறை யில் ஆட்சேர்ப்பு செய்கையில் III ஆந் தரத்திற்கு முதலில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு, III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதியான விண்ணப்பதாரி ஒருவர் இல்லாத பட்சத்தில் மாத்திரம் காணப்படும் வெற்றிடத்திற்கு பயிற்சி பெறும் தரத்திற்கு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரி ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்.

2.2. எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளின் முழுப்புள்ளிகளின் தேர்ச்சியின் ஒழுங்குமுறை அடிப்படையில் தகைமைகளைப் பரீட்சிப்பதற்கு மாத்திரம் நடாத்தப்படும் சாதாரண நேர்முகத் தேர்வின் பின்னர் வெற்றிடமாகக் காணப்படும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக (01) பொருத்தமானவர் தெரிவு செய்யப்படுவார்.

2.3. எழுத்து மூலப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படுவதோடு அனைத்து கேள்விகளுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

2.4. **எழுத்து மூலப் பரீட்சை :**

| *பாடங்கள்* | *நேரம்* | *உயர்ந்த பட்ச புள்ளி* | *சித்தி பெறுவதற்குத் தேவையான புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| பாடத்துறை சார்ந்த தொழில்நுட்ப பரீட்சை | 03 மணித்தியாலம் | 100 | 40% |

2.5. **எழுத்து மூலப் பரீட்சையின் பாடத்திட்டம் :**

| *வினாத் தாளின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| நுண்ணறிவு | விண்ணப்பதாரரின் தர்க்கரீதியான சிந்தனை மற்றும் அவரின் சிந்தனை பகுப்பாய்வு நிலைமைகளை முடிவு செய்யும் சக்தியையும் தீர்மானம் செய்வதற்கான கேள்விகளைக் கொண்டது |
| பாடத்துறை சார்ந்த தொழில் நுட்ப பரீட்சை | கட்டட கட்டுமானத்தின் அடிப்படைகள், கட்டுமான செயற்பாடுகள் அதற்கான காணி வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை வாசித்து புரிந்து கொள்ளக்கூடிய திறன், மதிப்பீடுகளைத் தயாரிக்கும் திறன், நீர் வழங்கல், நீர் போக்குவரத்து வழிமுறைகள் மற்றும் கழிவகற்றும் முறைமை பற்றி விண்ணப்ப தாரியிடமுள்ள திறன்களை மதிப்பீடு செய்யும் கேள்விகளை உள்ளடக்கியது. |

2.6. மேலே ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளை தெரிவு செய்து அவர்களின் அந்த புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு ஏற்ப பொதுவான நேர்முகத் தேர்வுக்கான முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்படும்.

2.7. மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப வினாத் தாளுக்கு பதிலளிப்பதற்குத் தேவையான கேத்திர கணித உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் விண்ணப்பதாரியினால் பரீட்சை நிலையத்திற்கு கொண்டுவரப்பட வேண்டும்.

2.8. பொதுவான நேர்முகத்தேர்வுக் குழுவானது, நிதி ஆணைக்குழுவின் செயலாளரினால் நியமிக்கப் படுவதோடு, இத்தேர்வுக்காக புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது என்பதுடன், தகுதி பரீட்சித்தல் மாத்திரம் இடம்பெறும்.

2.9. நிதி ஆணைக்குழுச் செயலாளரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற பின்னர் பரீட்சையில் பங்கு பற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகளை அறிவிப்பதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3.0. **பயிற்சி கால எல்லை இறுதியில் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல்**

3.1. திறந்த அடிப்படையில் பயிற்சி பெறும் தரத்திற்கு உள்ளீர்க்கப்படும் விண்ணப்பதாரி உரிய ஆட்சேர்ப்பு விதிமுறையில் உள்ளடங்கும் பயிற்சி கால எல்லையினை வெற்றிகரமாக

பூர்த்தி செய்ததன் பின்னர் நிதி ஆணைக்குழுவின் செயலாளரினால் வெளியிடப்படும் சான்றிதழை முன்வைத்த பின்னர் சேவையில் III ஆந்தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்.

3.2. பயிற்சியின் நிறைவில் நடாத்தப்படும் பரீட் சையில் சித்திபெறத் தவறும் பட்சத்தில் 06 மாதத்திற்கு அதிகரிக்காதவாறான காலப் பகுதிக்கு தனது பயிற்சிக் காலத்தினை நீடித்துக் கொள்வதற்கு விண்ணப்பதாரிக்கு சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறு நீடித்துக் கொள்ளும் கால எல்லை இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்தத் தவறினால் அவரது சேவை முடிவுறுத்தப்படும்.

**4.0. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் அல்லது கொடுப்பனவு**

4.1. 2025.03.25 ஆந் திகதிய 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் அட்டவணை II இற்கமைய தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III இற்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம், ரூ. 52,250 – 800 x 10 – 1119 x 11 – 1320 x 10 – 1350 x 10 – ரூ.100,040/- (MN – 3 / 2025) ஆகும்.

இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத் தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் செலுத்தப்படும் வேறு கொடுப்பனவுகளும் இப்பதவியில் உள்ளவருக்கு உரித்தாகும்.

4.2. பயிற்சி பெறும் தரத்தில் ஆட்சேர்ப்பு செய்யப் படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சி காலத்தினுள் மேற்கூறிய, 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் அட்டவணை VI இற்கமைய மாதாந்த கொடுப் பனவொன்று செலுத்தப்படும்.

**5.0. சேவையில் பணியமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்**

5.1. அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்புக்களை கட்டுப் படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும்,தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதி ஒழுங்குவிதிகளுக்கும் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மேற் பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் ஏற்பாடுகளுக்கும் அவற் றிற்கு காலத்துக்குக் காலம் செய்யப்படும் மற்றும் எதிர்வரும் காலத்தில் செய்யும் திருத்தங்களுக்கு கட்டுப்பட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.

5.2. இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III இல் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும்.(ஓய்வூதியத்திட்டம் குறித்து எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங் களுக்கு கட்டுப்பட்டு).நியமனம் பெற்றவரால் விதவைகள், தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிக்க வேண்டும், என்பதோடு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பரிந்துரைக்கப்படும் விதத்தில் நியமனம் பெற்றவர், அதற்கான பங்களிப்பு நிதியினை செலுத்த வேண்டும்.

5.3. இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III இற்கான நியமனம் மூன்று ஆண்டுகளுக்கான தகுதிகாண் காலத்திற்குட்பட்டதோடு, நியமனம் பெற்றவர் 2020.10.16 ஆந்திகதிய 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளுக்கமைய பதவியில் நியமனம் பெற்று மூன்று (03) ஆண்டுகள் கழியும்முன்னர் அரச கரும மொழித் தேர்ச்சியினை பெற வேண்டும். அப்பதவியில் நியமனம் பெற்று மூன்று (03) ஆண்டுகள் கழியும் முன்னர் முதலாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

5.4. இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் தரம் III தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் கட்டடம் மற்றும் அதன் மின்சார அமைப்பு, வளிச்சீராக்கல் தொகுதி, கழிவகற்றும் தொகுதி, மின் உயர்த்தி, நீர்க்குழாய்த் தொகுதி, தீயணைப்பு தொகுதி மின்பிறப்பாக்கி பராமரிப்பு மற்றும் மேற்பார்வை, கட்டடம் அமைந்துள்ள நிலப்பகுதி, கழிவுநீர் வடிகாலமைப்பு மற்றும் நீர் வழிந்தோடுவதை முறையே மேற்பார்வை செய்தல் மற்றும் பராமரிப்பு மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய ஏனைய பணிகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**6.0. விண்ணப்பிக்கும் முறை :**

6.1. நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை முறை மூலம் முன்வைக்கப்பட்ட மென்பிரதி மற்றும்செல்லுபடியாகும்விண்ணப்பம்ஒன்றென திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தாக / ஏற்றுக்கொள்ளப்படாததாக அமைப்பிற்கு உள் நுழைவதற்கு பயன்படுத்திய கையடக்கத்

தொலைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு (Email) தகவல் வழங்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் (Instructions) பத்திரத்தினை தரவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்யும் போது அவ்வறிவுறுத்தல்களை முறையாகப் பின்பற்றவும்.விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப் பட்ட பிரதியை பெற்றுக்கொண்ட பின்னர் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லு படியாகும் திருத்தமாகக் கருதப்பட மாட்டாது. பூர்த்தியற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

6.2. விண்ணப்பிக்கப்படுவது இலங்கை தொழில் நுட்பவியற் சேவையின் தொழில்நுட்ப உத்தி யோகத்தர் III ஆந் தரத்திற்கா அல்லது பயிற்சி பெறும் தரத்திற்கா என்பது விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் குறியீடு மூலம் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

6.3. விண்ணப்பதாரி விண்ணப்படிவத்தில் தனது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதோடு, பரீட்சைத் தினத்தில் பரீட்சை மண்டப மேற்பார்வை யாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவ்வாறு கையெழுத்தினை அத்தாட்சிப்படுத்திக் கொண்ட விண்ணப்பப்படிவத்தினையாகும். கையெழுத்தினை அத்தாட்சிப்படுத்திக் கொண்ட விண்ணப்பப்படிவமின்றி பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது.

6.4. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற ஆரம்பக் கணிப்பின் அடிப்படையில் விண் ணப்பப்படிவத்தினை ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பணத்தினை செலுத்தி முறையாக பூர்த்தி செய்துள்ள விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் நிகழ்நிலை முறை மூலம் மாத்திரம் வழங்கப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அதனைக் குறிப்பிட்டு இணையத்தள அறிவித்தல் மூலம் / விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ்செய்தி ஒன்றின் மூலம் அறிவிக்கப்படும். தனது அனுமதியட்டையினை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி எவரேனும் இருப்பின் அறிவித் தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது குறித்து இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனத்தின் பரீட்சைகள் ஒருங்கிணைப்புப் பிரிவிடம் கேட்டறிய வேண்டும். அவ்வாறு கேட்டறியும் போது விண்ணப்பதாரி, தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியினை சரியாகக் குறிப்பிட்ட வேண்டு கோள் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரித்து நிற்பது மிகவும் பயனுடையதாகும். அவ்வாறு விசாரிக்கையில் பரீட்சைத் திணைக் களத்தினால் வினவும் எதேனும் தகவல் ஒன்றினை உறுதிப்படுத்துவதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணத்தினை செலுத்திய பின்னர் கிடைக்கப்பெற்ற பற்றுச்சீட்டின் பிரதி ஆகியவற்றினை அருகே வைத்திருப்பது ஏற்புடையதாகும். அனுமதிப்பத்திரத்தினை பரிசீலித்து திருத்தங்கள் இருப்பின் கால தாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்தினை தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவத்தின்படி உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் / நேர் முகப் பரீட்சையின் போது திருத்தங்களை மேற் கொள்வதற்கான வேண்டுகோள்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

6.5. விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையினை வழங்குவது, அவர் பரீட்சைக்கு முன்வைப்பதற்கோ அல்லது பதவிக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்து கொண்டுள்ளதாகவோ ஏற்றுக்கொள்ளப்படு மெனக் கருதப்படமாட்டது.

6.6. அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்த மானியில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கேற்ப செயல் படுவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

7.0. **பரீட்சைக் கட்டணம்**

❖ பரீட்சைக் கட்டணம் ரூ.600.00 ஆகும்.பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தும் போது நிகழ்நிலை அமைப்பின் மூலம் முன்வைக்கப்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணஞ்செலுத்தும் வழிமுறைகளின் கீழ் மாத்திரம் பணம் செலுத்த வேண்டும்.

i. ஏதேனும் வங்கியொன்றின் கடனட்டை மூலம் (Any Bank Credit Card)
ii. இணையவழி கட்டணம் செலுத்தும் வசதி கொண்ட ஏதேனும் வங்கியொன்றின் வரவட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கி ஒன்லயின் வங்கி முறை மூலம்(Online Banking Method of Bank of Ceylon)

iv. எந்தவொரு இலங்கை வங்கி கிளை மூலமும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

7.1. மேற்குறிப்பிட்ட முறைகள் மூலம் பணம் செலுத்தும் வழிமுறை பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தின் பரீட்சைகளுக்குரிய தொழில் நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

7.2. கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் தகவலொன்றின் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத்தொகையும் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்டணத்தினை குறைவாகவோ அதிகமாகவோ செலுத்தியுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கட்டணம் செலுத்தும் வழிமுறைகளின் கீழ் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

7.3. பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் எவ்விதக் காரணங்களுக்கும் திருப்பியளிக்கப் படவோ வேறு பரீட்சை ஒன்றிற்கு மாற்றப் படவோ மாட்டாது.

**8.0. விண்ணப்பதாரிகளின் அடையாளம் :**

8.1. விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தான் தோன்றும் அனைத்து பாடங்களுக்கும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தனது அடையாளத்தினை உறுதிப் படுத்த வேண்டும். அதற்காக கீழுள்ள ஆவணங்கள் மாத்திரம் செல்லுபடியாகும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே, பரீட்சை விண்ணப்பதாரிகள் தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தக்கூடியவாறு முகம் மற்றும் மின் தொடர்பாடல் சாதனங்களை அணியவில்லை என்பதனை உறுதிப்படுத்தக் கூடியவாறு இரு காதுகளையும் மூடாதவாறு பரீட்சை நிலையத்திற்கு உள்நுழைய வேண்டும். அவ்வாறு தனது அடையாளத் தினை உறுதிப்படுத்த நிராகரிக்கும் விண் ணப்பதாரிகள் பரீட்சை நிலையத்திற்கு உள்ளெடுக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை நிலையத்திற்கு உள்நுழைந்த சந்தர்ப் பத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரு காதுகளும் மூடப்படாதவாறு காணப்படல் வேண்டும்.

**9.0. பொய்யான தகவல் வழங்குவதற்கான தண்டனை :**

9.1. விண்ணப்பதாரி ஒருவருக்கு தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சை நடைபெறும் காலப்பகுதியிலோ அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது ஏதேனும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். விண் ணப்பதாரி முன்வைத்துள்ள ஏதேனும் ஒரு தகவல் பொய்யானதென அறிந்தும் முன் வைத்துள்ளதாக தெரியவந்துள்ளதெனின் அல்லது ஏதேனும் ஒரு முக்கியதகவல் விண்ணப்பதாரியினால் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளதாக இருப்பின் அவரை அரச சேவையிலிருந்து பணிநீக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

**10.0. பொதுவான விடயங்கள்:**

10.1. பரீட்சையினை நடத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல் படுத்தப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் கட்டுப்படுவர்.அவ்விதி முறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர் உட்படுவார். பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

10.2. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடய மொன்று இருப்பின் அது தொடர்பாக மற்றும் பதவி வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் நிதி ஆணைக்குழுவின் செயலாளர் தீர்மானிப்பர்.

10.3. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிப் பதிப்புக்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடு காணப்பட்டால் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதெனக் கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஏ.டீ.எம்.யூ.டீ.பீ.தென்னக்கோன்,
செயலாளர்,
நிதி ஆணைக்குழு.

இல. 03,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2025, திசெம்பர் 18.

01-94